அரசு கலைக்கல்லூரி [தன்னாட்சி] கோயம்புத்தூர்-18

முதலாமாண்டு இளங்கலை, அறிவியல், வணிகவியல்

பகுதி - 1 தமிழ்ப்பாடத்திட்டம் [2018-2020]

முதல் பருவம் - தமிழ் - தாள்-I

Sub code: 18TAM11L

அலகு - III சிறுகதைகள்

அ. 1-4 சிறுகதைகள்

1. குளத்தங்கரை அரசமரம் - வ.வே.சு.ஐயர்

2. ஒரு நாள் கழிந்தது - புதுமைப்பித்தன்

3. நாக்கு - ஜெயமோகன்

4. இந்த யுகம் பூத்துக் குலுங்குமடி - கோமகன்

ஆ. 5-8 சிறுகதைகள்

5. தேவகியைத் தேடி - ஆர். சூடாமணி

6. அழுதபிள்ளை - சிவகாமி

7. இயல்பு - எஸ். ராமகிருஷ்ணன்

8. தலைமாணாக்கன் - இறையன்பு

# 1. குளத்தங்கரை அரசமரம் - வ. வே. சு. ஐயர்

• **கதைமாந்தர்கள்:**

1. ருக்மணி -> கதைத்தலைவி
2. நாகராஜன் -> ருக்மணியின் கணவன்
3. காமேசுவரையர் - மீனாட்சி -> ருக்மணியின் பெற்றோர்
4. ராமசுவாமி ஐயர் - ஜானகி -> நாகராஜன் பெற்றோர்
5. ஸ்ரீநிவாசன் -> நாகராஜன் நண்பன்
6. குளத்தங்கரை அரசமரம் -> ருக்மணியின் கதைசொல்லி

• **வ. வே. சு. ஐயர்**

தேசபக்தர், பன்மொழி அறிஞர். குளத்தங்கரை அரசமரம் வ.வே.சு. ஐயரால் எழுதப்பட்ட கதை. தமிழின் முதல் நவீன சிறுகதை என்று அடையாளப்படுத்தப்படுகிறது. இந்தக் கதை 'விவேகபோதினி' என்ற மாத இதழில் 1915 செப்டம்பர், அக்டோபர் இதழ்களில் தமிழிலும் ஆங்கிலத்திலும் வெளிவந்தது.

• **கதைச் சுருக்கம்:**

கதையை, குளத்தங்கரையில் இருக்கும் அரச மரம் ஒன்று கண்டும் கேட்டும் கூறுவதுபோல் படைக்கப்பட்டுள்ளது. அந்தணர் குடும்பத்திலிருக்கும் சிக்கல், சமூகச் சிக்கலாய் வெளிப்படுத்தப்படுகிறது. கதைத்தலைவி ருக்மணிக்கு அவளின் 12 ஆம் வயதில் நாகராஜனுடன் திருமணம் நிகழ்கிறது. அவளுக்குத் திருமண உறவு நிகழும் முன்னரே அவள் தந்தைக்குத் தொழிலில் நஷ்டம் ஏற்பட்டு ஏழையாகிவிட, நாகராஜன் வீட்டார் அவளைத் தள்ளி வைத்துவிட்டு அவனுக்கு

இரண்டாம் திருமணம் செய்துவைக்க ஏற்பாடுகள் செய்துவிடுகின்றனர். இதுபற்றி ருக்மணி நாகராஜனிடம் பேசும்போது பெற்றோர் வார்த்தைகளைத் தட்ட முடியாது. ஆனால் நான் உன்னைக் கைவிட மாட்டேன் என்று ஆறுதல் கூறுகிறான். ஆனால் நாகராஜனின் எண்ணமோ பெற்றோரின் பேச்சை மதிப்பது போல நடந்துகொண்டு அந்தத் திருமணத்தை நிறுத்தி அவர்களுக்குப் பாடம் புகட்ட வேண்டும் என்பதேயாகும்.

ஆனால் இந்தத் திட்டத்தைத் தன் நண்பனிடம் மட்டுமே கூறுகிறான். விளையாட்டிற்காக ருக்மணியிடம் கூறாமல் மறைத்து வைக்கிறான். இதையறியாத ருக்மணி அவன் கைவிட்டு விட்டான் என்று கருதிக் குளத்தில் மூழ்கி உயிரைவிட்டுவிடுகிறாள். இறுதியில் தன் விளையாட்டுத் தனத்தால் மனைவியை இழந்துவிட்டோம் என்று வருந்தி நாகராஜன் துறவு மேற்கொள்வதோடு கதை நிறைவடைந்துள்ளது.

பெண்களிடம் விளையாட்டாகக் கூட துன்பம் இழைக்க எண்ணக்கூடாது என்று அறிவுறுத்துகிறார்.

வினாக்கள்:

1. குளத்தங்கரை அரசமரம் சிறுகதையின் கதைமாந்தர்களின் பெயர்களைக் குறிப்பிடுக.
2. 'குளத்தங்கரை அரசமரம்' சிறுகதையில் ருக்மணியின் பாத்திரப்படைப்பை விவரி.
3. 'குளத்தங்கரை அரசமரம்' கதைச் சுருக்கத்தை எழுதுக.

## 2. ஒரு நாள் கழிந்தது - புதுமைப்பித்தன்.

### புதுமைப்பித்தன்:

புதுமைப்பித்தன் தமிழ்ச் சிறுகதைகளுக்கென ஒரு புதிய சகாப்தத்தை உருவாக்கியவர். உலகச் சிறுகதைகளின் தரத்திற்குத் தமிழ்ச் சிறுகதைகளை உயர்த்தியவர். இவருடைய கதைகள் எதார்த்தப் போக்கிற்கு (Realism) இடமளிக்கின்றன. இவருடைய 'ஒரு நாள் கழிந்தது' சிறுகதை மணிக்கொடி பத்திரிகையில் 1937 ஆம் ஆண்டு வெளிவந்தது. சிறுகதையின் நோக்கும் போக்கும் காணலாம்.

### கதைச்சுருக்கம்:

ஓர் எழுத்தாளரின் பொருளாதார வாழ்வியல் சிக்கலை சிறுகதை படம்பிடித்துக் காட்டுவதாய் அமைந்துள்ளது. அவர் குழந்தை அலமு சுறுசுறுப்பும் வாய்த்துடுக்கும் அழகாகப் பதிவு செய்துள்ளார். அவரைக் காண வரும் நண்பரை உபசரித்து காபி கொடுத்து விடைபெறும் நேரத்தில் மூன்று ரூபாய்கடன் கேட்க, நண்பர் தன்னிடமிருந்த எட்டணாவை மட்டும் கொடுத்துவிட்டுச் செல்கிறார். இதைப்பார்த்த அவர் மனைவி உங்களுக்கு வேலையில்லையா? என்று கேட்டு விட்டு, திடீரென்று நினைவு வந்தவளாக அதில் காப்பிப்பொடி வாங்கி வரச் சொல்கிறாள். எழுத்தாளர் முருகதாசரோ இதைக் கடைக்காரனுக்குத் தருவதற்காக வைத்திருக்கிறேன் என்று கூற, அது திங்கட்கிழமைக்குத் தானே... இப்போது போய் வாங்கி வாருங்கள் என்று கூறுகிறாள். அப்பொழுது திங்கட்கிழமைக்கு என்று இருக்க, அவள் திங்கட்கிழமை பார்த்துக் கொள்ளலாம். என்பதோடு கதை முடிக்கப்பட்டுள்ளது.

- எதிர்காலத்திற்கு இடமின்றி அன்றைய பொழுதை எப்படிக் கழிப்பது என்று எண்ணி வாழ்க்கை நடத்தும் நடுத்தர வர்க்க மக்களின் வாழ்வியலைப் பதிவு செய்துள்ளார்.
- இருப்பதைக் கொண்டு திருப்தி அடையும் நெறியை வாழ்க்கை நெறியாகக் காட்டுகிறார் ஆசிரியர்.

கதை மாந்தர்கள்:

1. முருகதாசர்
2. கமலம் ⟶ முருகதாசர் மனைவி
3. அம்பி ⟶ " மகன்
4. சுந்தரம் ⟶ " நண்பர்
5. சுப்பிரமணியம் ⟶ " நண்பர்
6. மளிகைக் கடைக்காரர்

வினாக்கள்:

ஒரிரு சொற்களில் விடை தருக.

1. 'ஒரு நாள் கழிந்தது' கதைமாந்தர்கள் பெயர்களைக் குறிப்பிடுக.
2. 'ஒரு நாள் கழிந்தது' சிறுகதையின் மையக்கருத்தை எழுதுக.

விரிவான விடை:

3. 'முருகதாசர்' பாத்திரப் படைப்பை ஒரு நாள் கழிந்தது சிறுகதை வழிநின்று விவரி
4. படைப்பாளர்களின் பொருளாதார நிலைமை ஒரு நாள் கழிந்தது சிறுகதை எவ்வாறு பதிவு செய்துள்ளது.

கட்டுரை வினா

5. 'ஒரு நாள் கழிந்தது' சிறுகதையை மதிப்பீடு செய்க.

# 3. நாக்கு - ஜெயமோகன்

## ஜெயமோகன்.

தமிழகத்தின் குறிப்பிடத்தக்க எழுத்தாளர்களில் ஒருவர். இவரது புனைவுகளில் மனித மனத்தின் அசாதாரணமான ஆழங்களும் நுட்பங்களும் வெளிப்படும். வெண்முரசு, விஷ்ணுபுரம், பின்தொடரும் நிழலின் குரல், கொற்றவை, காடு போன்றன இவரது குறிப்பிடத்தக்க படைப்புகள்

## கதைமாந்தர்கள்

1. நாசர்.
2. கிருஷ்ணன்.

## கதைச் சுருக்கம்:

நாசர் கிருஷ்ணன் வணிக ரீதியான நண்பர்கள். கிருஷ்ணன் வெளிநாடு செல்கிறார் அதற்கான பிரிவு உபசாரங்கள் தொடர் நிகழ்வாக விருந்தொன்றை நாசர் ஏற்பாடு செய்திருக்கிறார். விதவிதமான உணவு வகைகள் பரிமாறப்பட்டிருக்கின்றன. புதுவிதமான மதுவகை பரிமாறப்படுகிறது. நாசர் [illegible] பற்றி உரைக்கிறார் கெய்ரோவில் மதிப்புமிக்க விருந்தினரை உபசரிக்க வேண்டுமானால் இதைத்தான் பரிமாறுவோம் என்று. படிப்படியாக பேச்சு உணவுமுறை பழக்கவழக்கங்கள் பற்றித் திரும்புகிறது. எகிப்தில் வாழ்ந்த மக்களின் உணவுமுறை பஞ்சகாலத்தில் மாறிய தன்மையும், அவர்கள் உணவுப்பற்றாக்குறையால் புழுப்பூச்சிகளை உண்டு மனிதமாமிசத்தைச் சுவைக்கத் தொடங்கி அச்சுவை பிடித்துப்போய் மனிதனைக் கொன்று உணவாக்கும் பழக்கத்திற்கு அடிமையான வரலாற்றைப்

பற்றியும் நாசர் கூறுகின்றார். மனிதனின் நாக்கு சுவைக்கு அடிமையானால் சுவைதரும் பண்டம் குறித்த பின்புலம் பற்றிச் சிந்திக்காமல் விட்டுவிடுகின்றனர்.

கிருஷ்ணன் தனக்குப் பரிமாறப்பட்ட மதுவகை மிகவும் பிடித்துப் போனதாகக் கூறுகிறார். நாசர் உங்களுக்குத் தேவையான மதுவை முன்னரே அந்த நாட்டிற்கு அனுப்பி விட்டதாகக் கூறியவுடன் மகிழ்ச்சியுடன் விடைபெறுகிறார்.

நாசர் செல்லும் வழியில் முதிய பழங்குடிப் பெண்ணை தம் காரில் ஏற்ற வேண்டிய சூழல் ஏற்படுகிறது. அவரின் நீண்ட நகங்களைப் பார்த்துக் கேள்வி கேட்கிறார். இவை எதற்காக என்று. அப்பெண் எங்கள் பழங்குடியின் வழக்கம் நாங்கள் நகங்களை ஏராளமாக வெட்டி ஒரு கலவையில் போட்டு ஆறுமாதகாலம் ஊறவைப்போம். அது கரைந்துவிடும். மிகச் சிறந்த சுவையான மதுவகையாக மாறிவிடும். அதன் பெயர் சாஷ் என்று கேள்விப்பட்டதும் நாசர் மனவிழிப்பைப் பெறுவதுடன் கதை முற்றுப் பெறுகிறது.

## வினாக்கள்

### ஒரு சொற்களில் விடையளி:

1. நாக்கு சிறுகதையின் மையக்கரு யாது?

2. நாசர் கிருஷ்ணனுக்கு அளித்த மதுவகையின் பெயர் என்ன?

### விரிவான விடையளி

3. எகிப்தின் உணவுப்பழக்கம் குறித்து நாசர் குறிப்பிட்டது என்ன?

### கட்டுரை வினா

6. 'நாக்கு' சிறுகதை சமூகத்திற்கு உணர்த்தும் செய்தியாது? விவரி?

## 4. இந்த யுகம் பூத்துக் குலுங்குமா - கோமகள்

**கோமகள்:**

இவர் இயற்பெயர் ராஜலட்சுமி. இவர் முதல் நாவல் 'பனிமலர்' ஆகும். இனிக்கும் நினைவுகள், இருவரில் ஒருவர், பூச்சரம். இவரது 'அன்னை பூமி' தமிழ்வளர்ச்சித் துறையின் 1982 ஆம் ஆண்டிற்கான சிறந்த நூல் என்ற பரிசைப் பெற்றது.

**கதைச் சுருக்கம்:**

ராதா திருமணமான இரண்டு மாதத்தில் கணவனைப் பறிகொடுத்தவள். அவள் அண்ணன் - அண்ணி; ராதா - பரசுராமன் இரு இணைகளுக்கும் ஒரே மேடையில் திருமணம். கணவனை இழந்த ராதா தன் அத்தை கமலப்பாட்டியின் கைம்மை மனதுடன் வாழ்ந்து வருகிறாள். பாலுவின் மனைவி பிரசவத்தில் இறந்துவிடுகிறாள். பாலுவின் தாய் உடனே மகனுக்கு ராதாவின் தோழி ரேவதியை மறுமணம் செய்விக்க எண்ணி ராதாவைப் பேசச் சொல்லுகிறாள். அதைக் கேட்ட பாலு தங்கை ராதாவின் வாழ்வில் மாற்றம் இன்றி தன் வாழ்வு வளம் பெறாது என்று பதில் கூறுகிறான். ராதா பேருந்து நிறுத்தத்தில் தன் கணவன் பரசுராமனின் நண்பன் வாசுவைச் சந்திக்கிறாள். ராதாவின் நிலைமாற்ற எண்ணிய வாசு பாலுவிடம் பேசி திருமணம் செய்ய விரும்புகிறான். பாலு பழமை எண்ணமுடைய பெற்றோர் மனத்தையும் சஞ்சலம் கொண்ட ராதாவின் மனத்தையும் மாற்றி மறுமண ஏற்பாட்டை வெற்றியடையச் செய்கிறான்.

காலம் மாறிவரும் வேளையில் பெண்ணைக் கைம்மை நோன்பில் சிறை வைக்கக்கூடாது என்பதையும், ஆணும் பெண்ணும் சரிநிகர் சமம் உணர்வுகள் மதிக்கப்பட வேண்டும் என்பதைச் சொல்லும் கதையாக அமைந்துள்ளது.

கதை மாந்தர்கள்

1. ராதா → கதைத்தலைவி
2. பரசுராமன் → ராதாவின் கணவன்
3. பாலு → ,, அண்ணன்
4. வரதராஜன் → ,, தந்தை
5. லட்சுமி → ,, தாய்
6. ரேவதி → ,, தோழி
7. வாசு → பரசுவின் நண்பன்
8. கமலப்பாட்டி → வரதராஜனின் அக்காள்.

வினாக்கள்

ஒரிரு சொற்களில் விடை தருக

1. 'இந்த யுகம் நூத்துக் கிழவங்கிழடி' கதையின் மையக்கருத்தை எழுதுக.
2. 'இந்த யுகம் நூத்துக் கிழவங்கிழடி' சிறுகதையின் கதைமாந்தர்பெயரைக் குறிப்பிடுக.

விரிவான விடையளி

3. பாலுவின் பாத்திரப்படைப்பை விவரி
4. ராதாவின் பெற்றோரின் மனமாற்றத்திற்குக் காரணம் என்ன? விவரி

கட்டுரை வினா

5. 'இந்த யுகம் நூத்துக் கிழவங்கிழடி' கதை சமூகத்தில் எதைக் கண்டிக்கும் நோக்குடன் படைக்கப்பட்டது விவரி

## 5. தேவகியைத் தேடி - ஆர். சூடாமணி

**கதைச் சுருக்கம்:**

பெண் குடும்பச் சூழலால் தன்னையும் தன் இலக்கையும் மறந்து கரைந்து போகிறாள். தான் யார் என்பதைத் தேடிக் கண்டடையும் முயற்சி எடுக்க தகுந்த சூழல் அமைந்தாலும் குடும்பத்தினரின் தேவை அழைக்கிறது. என்பதை மையக்கருவாக கொண்டுள்ளது.

தேவகி குடும்பத்தலைவி நாற்பத்தாறு வயதில் உள்ளவர். சமூக சேவகராக உள்ள தோழி விமலாவைப் பார்த்துத் தானும் தன்னை உணர்கிறாள். தன்னையே கண்ணாடி பிம்பத்தில் பார்த்து தன் வயதிற்கான மாறுதல்களை உணர்கிறாள். நான் ஏன் எனக்கான இலட்சித்தை விருப்பங்களை மறந்து போனேன் என்று கழிவிரக்கம் கொண்டு அது முயற்சியாக முதல் சேவையைத் தொடங்க எண்ணுகிறாள். ஆயினும் கணவனின், குடும்பத்தினரின் தேவை தன்னை மீண்டும் மறக்கச் செய்கிறது. என்பதாகக் கதை நிறைவு பெறுகிறது.

**கதை மாந்தர்கள்:**

1. தேவகி → கதைத் தலைவி
2. சரவணன் → தேவகியின் கணவர்
3. சுதா, குமார் → தேவகியின் பிள்ளைகள்
4. விமலா → " தோழி

வினாக்கள்:

ஒரிரு சொற்களில் விடையளி

1. 'தேவகியைத் தேடி' கதையின் மையக்கரு யாது?

2. 'தேவகியைத் தேடி' கதைமாந்தர்கள் பெயர்களைக் குறிப்பிடுக.

விரிவான விடையளி

3. 'தேவகி' பாத்திரம் தன்னிலை குறித்து சிந்தித்தன யாவை?

கட்டுரை வினா

4. 'தேவகியைத் தேடி' கதையைத் திறனாய்வு செய்க.

## 6. அருதபிள்ளை - சிவகாமி

கதை மாந்தர்கள்

1. அய்யப்பன்
2. ராசாத்தி
3. சுகவனம் பண்ணையார்
4. கலெக்டர்
5. மாயவன் ஆட்சியர் உதவியாளர்

மையக்கருத்து

தனக்கான தேவையைச் சொல்லிக் கேட்பவருக்குத்தான் அது நிறைவேறும். என்பதனைக் கருவாகக் கொண்டது அருதபிள்ளை. அய்யப்பன் ராசாத்தி ஊரின் எல்லைப்புறத்தில் வில்லங்கத்தில் இருந்த நிலத்தை மீட்டுக் குடில் அமைத்து வேளாண்மை செய்து வாழ்ந்து வருகிறான். அவன்நிலமருகே

# 7. இயல்பு - எஸ். ராமகிருஷ்ணன்

## மையக் கருத்து

'நகுலன் வீட்டில் யாருமில்லை' என்ற தொகுப்பிலிருந்து எடுக்கப்பட்டது இயல்பு என்னும் இச்சிறுகதை. குரங்கிலிருந்து பரிணாமம் பெற்ற மனிதனின் அடிப்படைக் குணங்கள் மாறவில்லை அதே போல மனித உருவம் பெற்ற குரங்கின் அடிப்படை விலங்கினத்துவம் மாறாமல் இருப்பதை எள்ளல் மொழியுடன் சொல்லப்படும் கதை.

நகர்ப்புறங்களில் வணிகப்பிரதிநிதிகள் அதிகம் உண்டு. வணிகப்பிரதிநிதி ஒரு வீட்டில் தனது நிறுவனத்தின் அலைபேசியை விற்பதற்காகப் பல்வேறு கதைகளை, அறிவியலை உலகியலைப் பேசிவிட்டு விற்பனை நிறைந்து செல்லும் போது தனது எரிச்சலான குரங்கு குணத்தை மனிதனை மாற்றத்தை வெளிப்படுத்துவதாகச் சிறுகதை அமைகிறது.

## வினாக்கள்:

### ஒரு சொற்றொடர் விடையளி

1. இயல்பு சிறுகதை எந்தத் தொகுப்பில் இடம்பெற்றுள்ளது?
2. இயல்பு சிறுகதையின் மையக்கரு யாது?

### கட்டுரை வினா

3. 'இயல்பு' சிறுகதையில் மனித மனநிலையை எஸ். ராமகிருஷ்ணன் எவ்வாறு பதிவு செய்துள்ளார்.

இருந்த சுகவனம் பண்ணையார் அய்யப்பன் நிலத்திற்குச் செல்வதற்கான பாதையை அடைத்துவிடுகிறான். காலங்காலமாக நடைபாதை இருந்ததைச் சுட்டிக்காட்டி மாவட்ட ஆட்சியரிடம் பலமுறை மனு கொடுக்கின்றனர். ஆனால் அவர்களைப் பணி செய்யாத வண்ணம் பண்ணையார் வளைத்துவிடுகிறார். பல போராட்டத்திற்குப் பின் பெண் ஆட்சியரிடம் தன் உயிர் போகும் சூழல் நேரக் காரணம் இந்தப்பாதைச்சிக்கல் என்பதை வெளிப்படையாக உணர்த்துகிறாள். ஆட்சியர் உடனடியாக நடவடிக்கை எடுப்பதாகச் சிறுகதை முடிவடைகிறது. அருதப்பிள்ளை பால் பெறும். தன் சிக்கலை உணர்த்தினால் தீர்வு வரும் என்பதே கதையோட்டம்.

## வினாக்கள்

### ஓரிரு சொற்களில் விடையளி

1. 'அருதப்பிள்ளை' சிறுகதையின் மையக்கரு யாது?
2. 'அருதப்பிள்ளை' சிறுகதையின் கதைமாந்தர் பெயர்களைக் குறிப்பிடுக.

### விரிவான விடையளி

3. ராசாத்தி சிறுகதையின் பாத்திரப்படைப்பை விவரி.
4. சுகவனம் பண்ணையாரின் சூழ்ச்சி யாது?

### கட்டுரை வினா

5. 'அருதப்பிள்ளை' சிறுகதையைத் திறனாய்வு செய்க.

## 8. தலை மாணாக்கன் - இறையன்பு

மையக்கருத்து:

குருவிற்கும் சீடனுக்குமான உறவுநிலை. நடுநிலை தவறி தன் மாணாக்கனுக்கு இழைத்த கொடுமையை மறுபரிசீலனை செய்து தகுந்த பரிகாரம் செய்ய முனைகிறார்.

மகாபாரதக் கதையின் கதைமாந்தர்களான துரோணர் மற்றும் ஏகலைவன் இருவரின் மனவோட்டத் தொடர்ச்சியாகக் கதை பின்னப்பட்டுள்ளது. தனது மானசீக மாணவனின் அதீத திறனைச் சகித்துக் கொள்ளாமல் அவன் கட்டைவிரலை வெட்டச் சொன்ன குரு, வேறொரு சூழலில் மாணவனைச் சந்திக்கிறார். தனது தவற்றினால் கூனிக்குறுகி வேடனிடம் சென்று அவனிடமிருந்து விலகுகிறார். தன் மாணவனைத் தலைமை குருவாகக் கொண்டு பலருக்கு வித்தை கற்றுக் கொடுக்கிறார். தன் மாணவனையே குருவாக தலை மாணாக்கனாகத் தானே மாறியதைப்பற்றியதான கற்பனை புனைவாக சிறுகதை அமைகிறது.

வினாக்கள்:

ஓரிரு சொற்களில் விடை தருக.

1. 'தலை மாணாக்கன்' கதையின் மையக்கருத்தை எழுது.
2. தலை மாணாக்கன் யார்

விரிவான விடையளி

3. குரு தன்னை எவ்வாறு சுயபரிசோதனை செய்து கொள்கிறார்

கட்டுரை வினா

4. தலைமாணாக்கன் கதையைத் திறனாய்க.